# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2022.01.07 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# சேர்பெறுமதி வரி (திருத்தம்)

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன்பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 2022, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து நிதி நிறுவனங்களின் மீதான நிதிசார் சேவைகளின் வழங்குகையின்மீது சேர்பெறுமதி வரி வீதத்தை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிப்பதாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் 2022 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுக்குப் பயன்கொடுப்பதற்கென, குறித்தசில பண்டங்கள் மற்றும் சேவைகளைச் சேர்பெறுமதி வரியிலிருந்து விலக்களிப்பதற்கு முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையின் பாகம்* II *ஐத் திருத்துவதாகும்.*

ச.வ.- ஓ. 51/2021

## 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்     ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 25இ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "மற்றும் 2016, நவெம்பர் 1 ஆம் தேதியிலிருந்து தொடங்கும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்குப் பதினைந்து சதவீதமாதல் வேண்டும்;" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "மற்றும் 2016, நவம்பர் 1 ஆந்தேதியிலிருந்து தொடங்கும், ஆனால் 2021, திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடையும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக் குப் பதினைந்து சதவீதமாதல் வேண்டும்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(எ) 2022, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்கும் வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதிக்கு பதினெட்டுச் சதவீதமாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக் கான முதலாம் அட்டவணை யைத் திருத்துதல்

3. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை அதன் பாகம் II இல் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பாகத்தின் பந்தி (அ) வில் –

(அ) அப்பந்தியின் (xxxi) ஆம் விடயத்தில், "2020, மே 20 ஆந் தேதியிலிருந்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2020, மே 20 ஆந் தேதியிலிருந்து தொடங்கி 2021, திசெம்பர் 31 ஆந்தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) (xxxi) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(xxxii) 2022, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதற்குப்பின்னர், சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் விதப்புரையின்மீது நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட, ஏதேனும் உலகம்பரவுநோயை அல்லது பொதுச் சுகாதார அவசரகால நிலைமையை எதிர்கொள்வதற்குச் சுகாதார சேவைகளை வழங்குவதற்காக ஓர் அரசாங்க வைத்தியசாலைக்கு அல்லது சுகாதார அமைச்சுக்கு நன்கொடையளிக்கப்பட்ட மருத்துவச் சாதனங்கள், எந்திரத்தொகுதி, உபகரணங்கள், துணைக்கருவிகளும் அவற்றின் பாகங்களும், வைத்திய சாலைத் தளபாடங்கள், அவுடதங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்.";

(2) (ஔ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்-

"(ஔ) (அ) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசை வாக்கப்பட்ட பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின் கீழ் இனங்காணப்பட்டதும்-

(i) 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட எற்பாடுகள்) சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட உற்பத்தித் தீர்வைக்கு; அல்லது

(ii) 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிக்கு,

உட்பட்டதுமான ஏதேனும் மோட்டார் வாகனத்தின் இறக்குமதி அல்லது வழங்குகை; அத்தகைய வாகனத்தின் இறக்குமதிமீது அல்லது அதே தீர்வைக்கு அல்லது வரிக்கு உட்பட்ட அத்தகைய ஏதேனும் வாகனத்தின் உற்பத்திமீது;

(ஆ) 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதிக்குப்பின்னர் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் அல்லது உற்பத்தி செய்யப்பட்டிருப்பின், அதன் இறக்குமதிமீது அல்லது உற்பத்திமீது உட்பந்தி (அ) வின் விடயம் (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அதே தீர்வையைச் செலுத்துவதற்கு வேறுவகையாக உட்பட்டதாக

விருந்திருக்கும், 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதியன்றுள்ளவாறு விற்பனை செய்யப் படாதிருக்கும் ஏதேனும் மோட்டார் வாகனத்தின்,

இறக்குமதி அல்லது வழங்குகை; எந்த வாகனத்தின்மீது உள்ளீட்டு வரி உரிமைகோரப்பட்டதோ அந்த வாகனம் குத்தகைவிடுநரினால் மீள உடைமைகொள்ளப்பட்ட பின்னர் கையுதிர்க்கப்பட்டதும், 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதிக்குமுன்னர் செய்துகொள்ளப்பட்டவொரு நிதிக்குத்தகை உடன்படிக்கையின் கீழ் வழங்கப் பட்டதுமான ஏதேனும் வாகனம் தவிரவும்;

(இ) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் இனங்காணப் பட்டவையும் பின்வருவனவற்றுக்கு உட்பட்ட வையுமான சிகரெட்டுகளின் இறக்குமதி அல்லது வழங்குகை:-

(i) 2014, ஒற்றோபர் 25 ஆந்தேதிக்குப் பின்னர் இறக்குமதி செய்யப்பட்டி ருப்பின் அல்லது உற்பத்தி செய்யப்பட்டிருப்பின், அவற்றின் இறக்குமதிமீது அல்லது உற்பத்திமீது அதே தீர்வைக்கு உட்பட்டனவாக விருந்திருக்கும், 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதியன்றுள்ளவாறாக விற்கப்படாதுள்ள, கையிருப்புகளி லுள்ள சிகரெட்டுகள் உட்பட, அவற்றின் இறக்குமதிமீது அல்லது உற்பத்திமீது, 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 2016 நவெம்பர் 1 ஆந் தேதிக்குமுன்னர் 1989 ஆம் ஆண்டின்

13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட உற்பத்தித் தீர்வை மற்றும் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட ஆயவரி; அல்லது.

(ii) 2022 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் அவற்றின் இறக்குமதிமீது அல்லது உற்பத்திமீது, விதிக்கப்பட்ட விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி;

(ஈ) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் இனங்காணப்பட்டதும் பின்வருவனவற்றுக்கு அமைந்தது மான மதுபானம்:-

(i) 2014, ஒற்றோபர் 25 ஆந்தேதியன்று அல்லது அதற்குப்பின்னர், ஆனால் 2016, நவெம்பர் 1 ஆந்தேதிக்கு முன்னர், 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதிக்குப் பின்னர் இறக்குமதிசெய்யப்பட்டிருப்பின் அல்லது உற்பத்திசெய்யப்பட்டிருப்பின், இறக்குமதிமீது அதே தீர்வைக்கும் ஆயவரிக்கும் அல்லது அதன் உற்பத்திமீது மதுவரித் தீர்வைக்கும் உட்பட்டதாகவிருந்திருக்கும் 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதியன்றுள்ளவாறு விற்கப்படாதுள்ள, 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதிக்கு முன்னர் இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது உற்பத்திசெய்யப்பட்ட

*மதுபானமுட்பட, அதன் இறக்குமதி மீதான அல்லது அதன் உற்பத்தி மீதான உற்பத்தித் தீர்வை மீது, 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 2016, நவெம்பர் 1 ஆந் தேதிக்குமுன்னர் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் விதிக்கப் பட்ட சுங்கத்தீர்வை, (52 ஆம் அத்தியாய மான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட மதுவரித் தீர்வை மற்றும் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் விதிக்கப் பட்ட ஆயவரி; அல்லது*

(ii) *அதன் இறக்குமதிமீது அல்லது உற்பத்திமீது, 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி.".*

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.